தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6.

ந.க.எண்.015500/இ1/2022, நாள். 07.07.2023

-------

பொருள் தொடக்கக் கல்வி – ஊராட்சி / நகராட்சி / மாநகராட்சி / அரசு தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 01.08.2022-ல் உள்ளவாறு ஆசிரியர் / மாணவர்கள் பணியிட நிர்ணயம் – ஆசிரியரின்றி உபரி பணியிடங்கள் (Surplus Without Teacher) எனக் கண்டறியப்பட்ட இடைநிலை / பட்டதாரி / பிற வகை ஆசிரியர்கள் – இயக்குநரின் பொதுத் தொகுப்பிற்கு சரண் செய்தல் - சார்ந்து.

பார்வை

1 அரசாணை (நிலை) எண்.101, பக (வரவு செலவு -1)த் துறை, நாள்.18.08.2018.
2 அரசாணை (நிலை) எண்.231, பள்ளிக் கல்வி (சி2) துறை, நாள்.11.08.2010.
3 அரசாணை (1டி) எண்.217 பள்ளிக் கல்வி பக.5(1)த் துறை, நாள்.20.06.2019.
4 அரசாணை (நிலை) எண்.176, பள்ளிக் கல்வி (SE-5(1)த் துறை, நாள்.17.12.2021.
5 அரசாணை (நிலை) எண்.151, பள்ளிக் கல்வி (பக1(1)த் துறை, நாள்.09.09.2022.
6 சென்னை-6, தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 15500/இ1/2022. நாள்.16.09.2022 மற்றும் 04.11.2022.

-------

மேற்பொருள் சார்ந்து பார்வை 6-ல் காண் செயல்முறைகளின்படி, தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஊராட்சி / நகராட்சி / மாநகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009-ன்படியும், அரசாணை (நிலை) எண்.231 பள்ளிக் கல்வி (சி2) துறை நாள்.11.08.2010 நாளிட்ட அரசாணையின்படியும், ஒவ்வொரு ஆண்டும், காலமுறை தோறும் (Periodically) ஆசிரியர் / மாணவர்கள் பணியிட நிர்ணயம் செய்வது போன்று 01.08.2022-ன்படி அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களிடமிருந்தும் (தொடக்கக் கல்வி) பெறப்பட்ட விவரங்கள் அறிக்கையாக தொகுக்கப்பட்டு இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, 12.04.2023 அன்று இயக்குநர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தபு-பா.

அதன்படி, 01.08.2022-ல் உள்ள ஆசிரியரின்றி உபரி பணியிடங்கள் (Surplus Without Teacher) எனக் கண்டறியப்பட்ட இடைநிலை / பட்டதாரி / பிற வகை ஆசிரியர்களின் விவரங்கள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

இதில், 2022-23 ஆம் ஆண்டு மாறுதல் கலந்தாய்விற்கு பிறகு ஆசிரியரின்றி உபரி பணியிடங்களை (Surplus Without Teacher) தொடக்கக் கல்வி இயக்குநரின் பொதுத் தொகுப்பிற்கு உடன் சரண் செய்யுமாறு சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக்கல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், தற்போது சரண் செய்யப்படும் பணியிடங்கள் சார்பாக வட்டாரக் கல்வி அலுவலக அளவுகோல் பதிவேடு மற்றும் IFHRMS ஆகியவைகளில் தக்க பதிவுகள் செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ள தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள தொடர்புடைய வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Excel படிவத்தினை பூர்த்தி செய்து 13.07.2023 அன்று மாலை 5.00 மணிக்குள் deeesection@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிக்குமாறும், கையொப்பமிட்ட அசல் படிவத்தினை முகப்புக் கடிதத்துடன் இணை இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் பெயரிட்ட முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (தொடக்கக்கல்வி) அறிவுறுத்தப்படுகிறது.

இச்செயல்முறைகள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதலினை மறு அஞ்சலில் அனுப்புமாறு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு: Excel படிவம்.

7/7/23

தொடக்கக் கல்வி இயக்குநருக்காக

பெறுநர்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
(தொடக்கக் கல்வி).

E:\E-Sec 2022\E1\Staff Fixation - 2022\015500 Staff Fixation.Docx